# கலைஞரும் நானும்

54

**“எழுத்துகளின் கூட்டுத்தொகையே கலைஞர்தான் என நம்பிக்கொண்டிருக்கும் எனக்கு, அவர் அளித்த உயரம் வாழ்நாள் பேறு. அவர் என் பெயரைக் குறிப்பிட்டு எழுதிய அன்றே, நான் சிந்த வேண்டிய அத்தனை ஆனந்த கண்ணீரையும் சிந்தி விட்டேன்” என நினைவுகளைப் பகிர்கிறார் கவிஞர் நெல்லை ஜெயந்தா.**

■ கவிஞர் **நெல்லை ஜெயந்தா**



# “இல்லம் ராமாபுரம்.. உள்ளம் கோபாலபுரம்...!”

“முத்தமிழறிஞர் கலைஞரை வாசித்து நேசித்து வளர்ந்திருந்தாலும் அவருடனான நேரடி அனுபவம் எனக்குத் தாமதமாகத்தான் கிடைத்தது. ஆனாலும், அவை மலையளவு உயரம் கொண்டவையாக அமைந்துவிட்டன.

2003-ஆம் ஆண்டு ஒரு நாள், நான் அலுவலகத்தில் இருந்த போது எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. பேசியவர் கலைஞரின் உதவியாளர் அய்யா சண்முகநாதன். “தலைவர் உங்கள் கவிதைப் புத்தகத்தைப் படித்து விட்டு, ஒரு வாழ்த்து மடல் எழுதியிருக்கிறார். வந்து பெற்றுக் கொள்ளுங்கள்” என்றார்.

எனது கவிதை நூலைப் படித்துவிட்டு கலைஞர் வாழ்த்துகிறாரா என்ற சந்தேகத்தில் ‘அய்யா எனக்குத்தான் நீங்கள் தொலைபேசி செய்ய வேண்டுமா? என் பெயர் நெல்லை ஜெயந்தா’ என்றேன். ‘தென்றலோடு சில தினங்கள்’ என்கிற உங்கள் கவிதை நூலைப் படித்துவிட்டுத்தான் தலைவர் வாழ்த்து எழுதியிருக்கிறார்’ என அய்யா சண்முகநாதன் உறுதி செய்தார்.

நான் வீட்டுக்கு வந்ததும் அண்ணன் கவிஞர் அறிவுமதி அவர்களிடம் இந்தத் தகவலைப் பகிர்ந்து கொண்டேன். ‘தலைவரிடம் வாழ்த்துக் கடிதம் வாங்கச் செல்கையில் அதற்காகத் தலைவருக்கு ஒரு நன்றி கடிதம் கொடு’ என வழி காட்டினார்.

அடுத்த நாள், கோபாலபுரம் சென்று தலைவர் எழுதிய வாழ்த்துக் கடிதத்தைப் பெற்று வந்தேன். அன்று மாலை செய்திகளில் கலைஞர் வெளியிட்ட கடிதத்தில் என்னைப் பற்றியும் எனது கடிதத்தில் இருந்த வரிகளையும் குறிப்பிட்டுத் தலைவர் எழுதியிருந்தார். அது அன்றைய அரசியல் சூழலைக் குறிப்பிடும்படியான வரிகள்.

## வளர்பிறைக் கவிஞர்

*‘தஞ்சையில் அன்று நன்செய் உண்டு...*
*சாகுபடி ஆனது..!*
*இன்று நஞ்சை உண்டு சாகும்படியானது..!’*

என நான் எழுதியதை எடுத்து, ‘தஞ்சை விவசாயிகளின் தலையெழுத்தை வளர்பிறைக் கவிஞர் தம்பி ஜெயந்தா கவிதை சொல்லுகிறது பாருங்கள்’ என 11.12.2003 ‘உடன்பிறப்பே’ கடிதப் பகுதியில் ‘முரசொலி’யில் எழுதினார். கலைஞரின் அந்தக் கடிதம்தான் என் தலையெழுத்தையும் மாற்றிய கடிதம்.

அந்தக் கடிதம் வெளிவந்த அன்று நான் அலுவல் வேலையாக விருதுநகர் சென்றிருந்தேன். நான் திரும்பி வந்ததும், ‘தலைவர் வீட்டில் இருந்து இரண்டுமுறை அழைத்திருந்ததாகவும் நேரில் பார்க்க விரும்புகிறார்’ என்றும் என் வீட்டினர் குறிப்பிட்டனர். நான் திரும்பவும் ‘முரசொலி’ கடிதத்துக்காக நன்றி மடலை கவிதையாக எடுத்துக்கொண்டு தலைவரை சந்திக்கச் சென்றேன். ‘நான் அன்றே சிந்தி விட்டேன், ஆயுள் முழுவதும் சிந்த வேண்டிய ஆனந்தக் கண்ணீரை’ என அந்தக் கடிதத்தை முடித்து இருந்தேன்.

கோபாலபுரம் சென்று அய்யா சண்முகநாதன் அவர்களைச் சந்தித்ததும் , ‘என்னஙக மாத்தி மாத்தி கடிதம் கொடுத்துகிட்டு இருக்கீங்க’ என்று கேட்டதுடன், ‘உங்களைச் சந்திக்க வேண்டும்’ என்றார், எனக் கூறி அன்று மாலையே சந்திக்க வரும்படி சொன்னார்.

## நீ என்பது குடும்பமும்தான்

நான் சென்ற நேரத்தில் ஒரு பத்திரிக்கைக்காகப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தனர். எனினும், அப்போதே வரச் சொன்னார் கலைஞர். நான் சென்று வணங்கி, அவருக்கு சால்வை அணிவித்து மகிழ்ந்தேன். எத்தனையோ பேருக்குப் பின்னால் நின்று, அவர் உரையைக் கேட்டு இருக்கிறேன். இன்று அவர் முன்னால் நான் நின்றதும், என் கண்கள் ஆனந்தக் கண்ணீரால் நிறைந்திருந்தன. உடனே கலைஞர் அங்கிருந்த புகைப் படக்காரர்களிடம் இந்தப் படம் எதுவும் பத்திரிகையில் வந்து விடக்கூடாது என்றார்.

> **“தமிழ் கிடைத்தபோது அதிகாரங்களைப் பாடினார் வள்ளுவர். அதிகாரம் கிடைத்த போதெல்லாம் தமிழைப் பாடினார் கலைஞர்.”**

நான் அரசு ஊழியர் என்பதால், வேலைக்கு எதுவும் சிக்கலாகி விடக்கூடாது என்கிற அந்த அக்கறை அவ்வளவு மதிநுட்பமானது. அதிலும், “நீ அரசாங்க ஊழியன். நீ என்பது நீ மட்டுமல்ல, உனக்குப் பின்னால் ஒரு குடும்பம் உள்ளது. உனது அரசியல் உணர்வு உள்ளுக்குள்ளே இருக்கட்டும்” எனக் குறிப்பிட்டதுடன், “உனது எழுத்துதான் இங்கு அழைத்து வந்தது. அதனால் நீ எப்போது வேண்டுமானாலும் வரலாம்” என என் வாழ்க்கையின் பேரின்பத்தை அளித்தார் கலைஞர்.

## உள்ளம் கோபாலபுரம்

அதன் பின்னர் ஒரு 15 நாட்கள் கழித்து தலைவர் கலைஞர் எழுதிய உடன்பிறப்புக் கடிதத்தில் ‘எனக்கு வந்த கடிதங்களில் எனக்குப் பிடித்த ஏழு கடிதங்கள்’ என என் கடிதத்தையும் குறிப்பிட்டிருந்தார். தமிழ்நாட்டில் மாபெரும் மக்கள் தலைவர், ‘அவரால் அளிக்கப்பட்ட அந்த உயரத்தைக் காப்பாற்ற வேண்டுமே’ என எப்போதும் நினைக்கத் தூண்டும் வகையில், அந்த நாட்கள் இருந்தன.

அதன் பின்னர் தலைவர் கலைஞர் அவர்களின் இலக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. குறிப்பாக, ஆண்டுதோறும் வழங்கப்படும் ‘கலைஞர் பொற்கிழி விருது’ முதன்முதலில் அறிவிக்கப்பட்டபோது, அந்த நிகழ்வை நான் தான் தொகுத்து வழங்கினேன்.

அந்த நிகழ்ச்சியில் தலைவர் எனக்குப் பொன்னாடை போர்த்திய போது “நீ அவ்வளவு பெரிய ஆள் ஆயிட்டியா?” எனக் கிண்டல் செய்தார். ‘கலைஞர் காவியம்’ என்று கவிஞர் வாலி அவர்கள் ஒலிநாடா வெளியிட்டார். அந்த நிகழ்வை நான் தொகுத்து வழங்கினேன். நிகழ்ச்சி முடிந்ததும், தலைவர் அவர்களிடம் கவிஞர் வைரமுத்து அவர்கள் என்னை அறிமுகம் செய்தார். உடனே அய்யா சண்முகநாதன் அவர்கள் “ஜெயந்தாவை குறித்து தலைவர் இரண்டு முறை கடிதம் எழுதி இருக்கிறாரே” என்றார்.

அதன் பின்னர் ‘சிவாஜி’ பட வெற்றி விழாவைத் தொகுத்து வழங்கினேன். அதில் பணியாற்றிய வர்களுக்கு கலைஞர்தான் விருது வழங்கினார். அந்த நேரத்தில்தான் நான் வீடு கட்டி குடியேறி இருந்தேன். மேடையில் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது கவிஞர் வாலி அவர்கள் கலைஞரிடம், போன வாரம் நெல்லை ஜெயந்தாவின் வீட்டைத் திறந்து வைத்தேன் எனக் குறிப்பிட்டார். எங்கே? என்றார் கலைஞர்.

அதற்கு வாலி, ‘இல்லம் ராமாபுரம்’ எனக் குறிப்பிட்டார். என்னைத் திரும்பிப் பார்த்த கலைஞர் அவர்கள் சற்றும் தாமதிக்காமல் ‘உள்ளம் கோபாலபுரம்’ என்று அந்த உரையாடலைக் காவியமாக்கிவிட்டார்.

## வாழ்த்துப் பாடல் உத்தரவு

தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக தலைவர் அறிவித்தபோது வள்ளுவர் கோட்டத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. அந்தப் பாராட்டு விழாவின்போது தலைவரை வரவேற்பதற்காக ஒரு பாடலை நான் எழுதி இருந்தேன்.

“முத்தமிழே நீ வாழ்க, மூவேந்தே நீ வாழ்க” என்கிற அந்தப் பாடலை தலைவர் நிகழ்ச்சிக்குச் செல்லும் இடமெல்லாம் ஒலிபரப்பியதால், பாடல் நன்றாக இருக்கிறது என சிலாகித்துப் பாராட்டி இருக்கிறார். அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் பொதுப்பணித்துறை நிகழ்ச்சிகள் என்பதால், அண்ணன் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ‘இனி எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்தப் பாடல் ஒலிக்க வேண்டும்’ என உத்தரவே போட்டார். என்னை உயரத்தில் ஏற்றி வைத்த முத்தமிழறிஞர் அவர்களுக்கு நான் அழகு செய்த சிறு கைமாறாக அதை நினைத்துக் கொள்வேன்.

## தேர்தல் மயக்கத்தில், திணை மயக்கம்

‘திணை மயக்கம்’ என்கிற எனது நூலுக்கு அவரிடம் அணிந்துரை கேட்டிருந்தேன். அது தேர்தல் நேரம் என்பதால், பரபரப்பாக இருந்தார்.

“தேர்தல் மயக்கத்தில் இருக்கிற நேரத்தில், நீ திணை மயக்கம் கொண்டு வருகிறாயே” என்றவர், அடுத்த இரண்டு நாட்களில் நூலை வாசித்து விட்டு அணிந்துரை எழுதியிருந்தார். இந்தியாவின் மாபெரும் அரசியல் தலைவரான அவரை இயக்கியது கொள்கை மட்டுமல்ல. எழுத்து, பேச்சு , தமிழ்தான் என அன்று நான் ஆணித்தரமாக நம்பினேன். என் மகள் திருமணத்தின் போது அவர் வந்து வாழ்த்த வேண்டுமென அழைப்பு வைத்தேன். மருத்துவர்கள் ஓய்வெடுக்க வேண்டும் எனச் சொன்ன நிலையிலும், திருமணத்துக்கு வந்து வாழ்த்தினார். ஒரு சாமானியன் வீட்டுத் திருமணத்துக்கு அவரை அழைத்து வந்தது என் எழுத்துகளே, தமிழே என என் குடும்பத்தினரிடம் அந்தப் பெருமையைப் பேசிக்கொள்வேன்.

செம்மொழி மாநாட்டில் அவருக்கு முன் வாசித்த கவிதையை, இப்போது சொல்லத் தோன்றுகிறது. “தமிழ் கிடைத்தபோது அதிகாரங்களைப் பாடினார் வள்ளுவர். அதிகாரம் கிடைத்த போதெல்லாம் தமிழைப் பாடினார் கலைஞர். ஆகையால், தமிழ் நிலைக்கும் வரைக்கும் கலைஞர் நிலைத்திருப்பார்”. அதேபோல், என் நினைவிருக்கும் வரைக்கும் கலைஞரை நினைத்துக் கொண்டே இருப்பேன்.

...பகிர்வார்கள்

## பிரதமரையும் விட்டு வைக்காத சனாதனம்!

அயோத்தியில் ஜனவரி 22-ஆம் தேதி பிரதமர் மோடி ராமர் சிலையைத் தொட்டுப் பிரதிஷ்டை செய்வதாக அறிவிப்புகள் வெளியாகின. ஆனால், சங்கராச்சாரியார்கள் இதை கடுமையாக எதிர்த்தனர்.

“கடவுள் சிலையைத் தொட்டுப் பிரதிஷ்டை செய்வது பிரதமருடைய வேலையல்ல. சனாதன தர்மத்தை மீறி, அரசியலுக்காக இப்படிச் செய்கிறார்” என்றனர்.

இந்நிலையில், ராமர் கோயில் கருவறையில் ஜனவரி 18-ஆம் தேதி மாலையில் குழந்தை ராமர் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. மைசூரில் தயாரிக்கப்பட்ட 200 கிலோ எடை கொண்ட குழந்தை ராமர் சிலைக்கு, ஆகம விதிப்படி 4 மணி நேரம் பூஜைகள் மேற்கொள்ளப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சிலையின் கண்கள் மட்டும் துணியால் மூடப்பட்டிருக்கின்றன. 22-ஆம் தேதி கண்களைத் திறந்து பூஜைகள் மேற் கொள்ளப்பட உள்ளன. சங்கராச்சாரி யார்களின் எதிர்ப்பால்தான் பிரதிஷ்டை நாளுக்கு முன்பாகவே குழந்தை ராமர் சிலை நிறுவப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது. ஏன் பிரதமர் மோடி ராமர் சிலையைத் தொட்டுப் பிரதிஷ்டை செய்யக்கூடாது என்ற கேள்விக்குள் இருக்கிறது “எது சனாதனம்” என்பதற்கான பதில்.

## ::ப்ளாஷ்பேக்



## ‘மதுரை மீனாட்சி’யால் அறிமுகம்!

1990-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, அண்ணா அறிவாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கலைஞருடன் இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் பரிதி இளம்வழுதி, என்.வி.என் சோமு, ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், அன்பில் பொய்யாமொழி என பெரும் தலைவர்கள் கூட்டமே நிறைந்திருந்தது. கலைஞரின் ‘மதுரை மீனாட்சி’ திரைப்படத்துக்கு மூலக்கதை வழங்கிய ஹரிராஜன் அவர்கள் என்னை தலைவர் கலைஞரிடம் அறிமுகம் செய்து வைத்து, புகைப்படத்தில் இடம்பெறச் செய்தார்.



சங்கரப் பாண்டியன்

**-சொ.சங்கரப் பாண்டியன், சென்னை**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்youthwing@dmk.in

## கருவூலம்

### அஞ்சாநெஞ்சனின் உருக்கமான பேச்சு!

**1948 அக்டோபர் 23, 24-இல் ஈரோட்டில் திராவிடர் கழக சிறப்பு மாநாடு நடைபெற்றது. ‘பெட்டி சாவியை, அண்ணாவிடம் கொடுக்கப் போகிறேன்’ என்று பெரியார் அறிவித்த அந்த மாநாட்டில், அஞ்சா நெஞ்சன் அழகிரியின் பேச்சு உருக்கமாக இருந்தது. “உடல்நிலை மோசமாகிவிட்டது, இதுவே இறுதி நிகழ்ச்சியாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். தலைவருக்கு இறுதி வணக்கம் தெரிவிக்க வந்தேன்” என்று தழுதழுத்த குரலில் பேசினார் அவர். அதன்பின், உடல்நிலை மேலும் மோசமாகி, 1949 மார்ச் 28-இல் அஞ்சாநெஞ்சன் அழகிரி காலமானார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 364




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131